# பசுமைக்கதிர்

(ஜனவரி - ஜூன் - 2025)



கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல்,
வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம் - 604 410.
தொலைபேசி : 04182-290561, 6384093303,
kvktvmalai91@gmail.com
www.kvkthiruvannamalai.com


சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. - குறள்


இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புது தில்லி

## வேளாண்மை அறிவியல் மையம்

திருவண்ணாமலை மாவட்டம்


भारत 2023 INDIA

INTERNATIONAL YEAR OF MILLETS 2023

### ஆசிரியர் குரல்

**விவசாயச் சொந்தங்களுக்கு,**

மீண்டும் பசுமைக்கதிர் வாயிலாக அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மாறிவரும் பருவநிலைக்கு தகுந்தாற்போல பயிர்சாகுபடியில் பல இன்னல்களை விவசாயிகள் தற்போது சந்தித்து வருகின்றனர். பருவம் தவறிய மழை, வெப்பநிலை மாறுபாடு, விவசாய வேலைக்கு ஆட்கள் பற்றாக்குறையென பல்வேறு பிரச்சினைகள் இருந்த போதும் விவசாயத்தை தொழிலாக செய்யும் விவசாயிகளால்தான் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாடாக இந்தியா தற்போது வளர்ந்துள்ளது. நவீன தொழில்நுட்பங்கள் புகுத்தி பயிர்சாகுபடி செய்யப்பட்டாலும் இயற்கை முறை விவசாயம் தற்போது பரவலாக்கப்பட்டு வருகிறது. இயற்கை விவசாய முறைகளும் அதற்கான இடுபொருட்கள் தயாரிப்பு முறை குறித்த விழிப்புணர்வு மத்திய மாநில அரசுகள் முன்னெடுத்து வருகின்றன. அடுத்த தலைமுறைக்கு நஞ்சில்லா உணவை கொடுக்கவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இயற்கை விவசாய நடைமுறைகளை நாம் பயன்படுத்துதோடு மற்ற விவசாயிகளிடத்திலும் இதுபற்றிய புரிதல் ஏற்படுதத வேண்டும். இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு மண் வளத்தை மாற்றி இயற்கை விவசாய முறைகள் மூலம் பயிர் உற்பத்தி திறனை அதிகரிக்க கேட்டுக்கொள்கிறேன்.

ச.ரமேஷ், B.A.,LLB.
சிறப்பு ஆசிரியர்

## வயல் வெளி ஆய்வுத்திட்டம்

### அதிக மகசூல் தரும் கேழ்வரகு இரகங்களை மதிப்பீடு செய்தல்

வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ் வந்தவாசி வட்டம் காவணியாத்தூர் கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு அதிக மகசூல் தரும் கேழ்வரகு ஏ.டி.எல்-2 மற்றும் சி.எப்.எம்.வி-1 இரகங்களை மதிப்பீடு செய்ய செயல் விளக்கம் அமைக்கப்பட்டது. ஆய்வின் முடிவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தால் வெளியிடப்பட்ட ஏ.டி.எல்-2 இரகத்தில் ஒரு எக்டருக்கு 25.3 குவிண்டால் கிடைப்பது உறுதி செய்யப்பட்டது. நிகர வருமானமாக எக்டருக்கு ரூ.51450/- வரை கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.





### உயர் விளைச்சல் தரும் வெண்டை வீரிய ஒட்டு இரகங்களை மதிப்பீடு செய்தல்

தெள்ளார் வட்டம் சேனல் கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரும் வெண்டை வீரிய ஒட்டு இரகங்களில் வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் COBH-4 வெண்டை இரகம் எக்டருக்கு 249.50 குவிண்டால் மகசூல் கொடுத்தது. இது IIHR-இன் அர்க்கா நிகிதா இரகத்தை விட 11.47 சதவிகிதம் அதிகமாகும். இதன் வரவு செலவு விகிதம் எக்டருக்கு 2.79 ஆகும். நிகர வருமானம் எக்டருக்கு ருபாய் 144716/- வரை கிடைக்கப் பெற்றதாக விவசாயிகள் கூறினார்கள்.

### தக்காளியில் வேர்முடிச்சு நூற்புழுவை கட்டுப்படுத்தும் தொழிற்நுட்பங்களை மதிப்பீடு

தக்காளியில் வேர்முடிச்சு நூற்புழுவை கட்டுப்படுத்த வேளாண்மை அறிவியல் மையத்தால் வயல்வெளி ஆய்வு திட்டம் போளுர் வட்டாரம் படவேடு கிராமத்தில் 5 முன்னோடி தக்காளி விவசாயிகளின் வயலில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் வுயேரு தொழில்நுட்பம் எக்டருக்கு 918.36 குவிண்டால் மகசூல் கொடுத்தது. இது IIVR-இன் தொழில்நுட்பத்தை விட 14.64 சதவிகிதம் அதிகமாகும். மேலும் நூற்புழுவை சிறப்பான முறையில் கட்டுப்படுத்தி நிகர வருமானமாக எக்டருக்கு ருபாய் 272834/- வரை கிடைக்கப் பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.

## உயர் விளைச்சல் தரும் கத்திரி இரகங்களை மதிப்பீடு செய்தல்



வயல்வெளி ஆய்வு திட்டத்தின் கீழ் ஆரணி வட்டம் மட்டதாரி கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளுக்கு கத்திரியில் உயர் விளைச்சல் தரும் அர்க்கா நீலஞ்சல் சியாமா மற்றும் MDU-2 இரகங்களை மதிப்பீடு செய்தது. மதிப்பீட்டின் முடிவில் அர்க்கா நீலஞ்சல் சியாமா இரகத்தினை விட MDU-2 இரகம் 11.66 சதவிகிதம் அதிக மகசூலை கொடுத்து ஒரு எக்டருக்கு 283.78 குவிண்டால் மகசூலை உறுதி செய்தது. இதன் வரவு செலவு விகிதம் ஒரு எக்டருக்கு 2.08 ஆகும். நிகர வருமானம் எக்டருக்கு ரூபாய் 178413/- வரை கிடைக்கப் பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.

# முதல்நிலை செயல்விளக்கங்கள்

## எண்ணெய்வித்துப் பயிர்களில் தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கம்





தொகுப்பு முதல்நிலை செயல்விளக்க திட்டத்தின் கீழ் நிலக்கடலையில் ரபி பருவத்தில் கீழ்பென்னாத்தூர் வட்டம் குண்ணங்குப்பம் மற்றும் திடீர்குப்பம் கிராமங்களில் 40 எக்டர் பரப்பளவில் 100 விவசாயிகளுக்கு டி.எம்.வி-14 நிலக்கடலை இரகத்தில் முதல்நிலை செயல்விளக்கம் செயல்படுத்தப்பட்டது. இச்செயல்விளக்கத்தின் முடிவில் ஒரு எக்டருக்கு 19.03 குவிண்டால் மகசூல் பெற்றனர். விவசாயிகள் பயன்படுத்திய தொழில்நுட்பத்தை விட 22.77 சதவிகிதம் கூடுதலாக மகசூல் பெற்றனர். இதன் நிகர வருமானமாக ரூபாய் 71545/- வரை எடுத்ததாக விவசாயிகள் கூறினார்கள்.

## பயறுவகைப் பயிர்களில் தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கம்

பயறுவகைப்பயிர்களில் ரபி பருவத்தில் தூரிஞ்சாபுரம் வட்டம் கஸ்தம்பாடி, நாடானந்தல் மற்றும் கோணலூர் கிராமங்களில் 100 எக்டர் பரப்பளவில் 250 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பம் வாயிலாக வம்பன்-8 உளுந்து இரகத்தில் முதல்நிலை செயல்விளக்கம் செயல்படுத்தப்பட்டது. இச்செயல்விளக்கத்தின் முடிவில் ஒரு எக்டருக்கு 7.89 குவிண்டால் மகசூல் பெற்றனர். விவசாயிகள் பயன்படுத்திய தொழில்நுட்பத்தை விட 14.35 சதவிகிதம் கூடுதலாக மகசூல் பெற்றனர். இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதன் மூலம் ரூபாய் 34018/- வரை நிகர வருமானம் கிடைக்கப்பெற்றதாக விவசாயிகள் கூறினார்.

## பாலூர்-2 சுரைக்காய் இரகம் பற்றிய செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் ரபி பருவத்தில் தெள்ளார் வட்டம் சத்தியவாடி கிராமத்தில் 10 விவசாயிகளுக்கு பாலூர்-2 சுரைக்காய் இரகம் பற்றிய செயல்விளக்கம் நடத்தப்பட்டது. இச்செயல்விளக்கத்தின் முடிவில் 363.31 குவிண்டால் எக்டருக்கு மகசூலாகப் பெறப்பட்டது. இவை விவசாயிகள் பயன்படுத்திய இரகத்தை விட 20.66 சதவிகிதம் கூடுதலாகும். இதன் வரவு செலவு விகிதம் ஒரு எக்டருக்கு 2.78 ஆகும்.

## உளுந்தில் மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்புதிறன் கொண்ட LBG884 இரகம் செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் மையத்தின் மூலம் காரிப் பருவத்தில் கலசப்பாக்கம் வட்டம் மோட்டூர் கிராமத்தில் 10 விவசாயிகளுக்கு சம்பங்கி பூவில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய செயல்விளக்கம் நடத்தப்பட்டது. இச்செயல்விளக்கத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 105.9 குவிண்டால் மகசூல் பெற்றனர். இவை விவசாயிகள் பயன்படுத்திய தொழில்நுட்பத்தை விட 19.79 சதவிகிதம் கூடுதலாக மகசூல் பெற்றனர். இதன் வரவு செலவு விகிதம் ஒரு எக்டருக்கு 2.89 ஆகும்.

## பசுக்களில் பால்உற்பத்தியை அதிகரிக்க டானுவாஸ் கிராண்ட் ஊட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தென்சேந்தமங்கலம் கிராமத்தில் பட்டியலின மக்கள் மற்றும் ஜமுனாமரத்தூர் வட்டம் நம்மியம்பட்டு கிராமத்திலிருந்து பழங்குடியின மக்களையும் முதல்நிலை செயல்விளக்க திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுத்து அவர்களது கறவைமாடுகளின் பால்உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு டானுவாஸ் கிராண்ட் ஊட்டம் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த செயல் விளக்கத்தின் முடிவில் நாளொன்றுக்கு ஒரு கறவை பசுவிலிருந்து 500 மி.லி முதல் 1 லிட்டர் வரை கூடுதலாக பால்உற்பத்தி கிடைக்கப்பெற்றது. இதன் மூலம் கூடுதலாக வருடத்திற்கு ரூ.5400 வருமானம் கிடைத்தது. இதில் 20 விவசாயிகள் பங்கு பெற்று பயன்பெற்றனர்.









## விரிவாக்க செயல்பாடுகள்

### பாரத பிரதமரின் உழவர்களுக்கான கௌரவ நிதி வழங்குதல்



வேளாண் அறிவியல் மையம் சார்பாக இந்தியாவின் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் காணொலி வாயிலாக உழவர்களுக்கான 19வது கௌரவ நிதி வழங்கும் நிகழ்ச்சி 24.02.2025 நாளன்று நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. முக்கிய நிகழ்வாக மாண்புமிகு பாரதப்பிரதமரின் கௌரவ நிதி வழங்குதல் மற்றும் அந்நிகழ்ச்சி விவசாயிகளுக்கு நேரிடையாக காணொலி வாயிலாக காண்பிக்கப்பட்டது. இதனை பல்வேறு கிராமங்களிலிருந்து 175 விவசாயிகள் கண்டு பயன்பெற்றனர்.

### கண்டுணர்வு சுற்றுலா



திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு வட்டங்களிலிருந்து 21.02.2025 மற்றும் 28.02.2025 அன்று 48 விவசாயிகள் பெங்களூரிலுள்ள இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் ஏற்பாடு செய்த விவசாய கண்காட்சிக்கும், சென்னையிலுள்ள கோழியின ஆராய்ச்சி நிலையத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். சுற்றுலாவின் போது விவசாயிகள் காய்கறி விதைகள், செடிகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் போன்ற பல்வேறு தொழில் நுட்பங்களை அறிந்து கொண்டு பயன்பெற்றனர்.

### கால்நடை மருத்துவ முகாம்கள்

அரசங்குப்பம், மட்டதாரி மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய கிராமங்களில் 05.02.2025, 20.03.2025 மற்றும் 21.03.2025 நாட்களில் பட்டியல் இன மற்றும் பழங்குடி விவசாயிகள் பயன்பெறும் வகையில் கால்நடை முகாம்களை நடத்தியது. கால்நடைகளில் நோய் மேலாண்மை, குடற்புழு நீக்கம் மற்றும் தீவன உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இம்முகாம்களில் 161 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். விவசாயிகளின் 899 கால்நடைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு நோய் தடுப்பு ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

### அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம்

வேளாண்மை அறிவியல் மையத்தின் 24ஆவது அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம் 12.03.2025 அன்று மையத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர்.பி.பி.முருகன் தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனத்தின் பெருந்தலைவர் திரு. எஸ். ரமேஷ், ஹைதராபாத், வேளாண் தொழில்நுட்ப பயன் பாட்டு ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ஏ.பாஸ்கரன், அத்தியேந்தல் சிறுதானிய மகத்துவ மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.வைத்தியலிங்கம், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. விஜய் நேகர் மற்றும் அனைத்து துறை சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியின் போது வேளாண்மை அறிவியல் மையத்தின் அக்ரிஸ்மார்ட் எனும் மொபைல் செயலி விவசாயப் பொருட்களுக்கான சந்தைப்படுத்துதலை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

### விவசாய இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சிகள்

தமிழ்நாடு அரசு வேளாண்மை உழவர் நலத்துறையுடன் இணைந்து திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஊரக இளைஞர்களுக்கான 6 நாட்கள் திறன் வளர்ப்பு பயிற்சி 15 விவசாயிகளுக்கு மூலிகை, நறுமணப் பயிர்களின் உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல் குறித்து 28.04.2025 முதல் 03.05.2025 வரை நடைபெற்றது. மேலும் தேசிய மீன்வள முகமை, ஹைதராபாத் உடன் இணைந்து மீன் வளர்ப்போர்க்கான மூன்று நாள் பயிற்சி மீன் பொருட்களை சுகாதாரமான முறையில் கையாளுதல் மற்றும் மதிப்பூட்டல் 18.02.2025 முதல் 20.03.2025 வரையிலும் கூட்டு மீன்வளர்ப்பில் மேம்பட்ட உற்பத்தி தொழில்நுட்பங்கள் எனும் தலைப்பில் 24.02.2025 முதல் 26.02.2025 வரையிலும் நடைபெற்றது. இதில் 50 மீன் வளர்ப்போர் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இதில் வெம்பாக்கம், வந்தவாசி, போளூர் மற்றும் தண்டாரம்பட்டு வட்டாரத்திலிருந்து 50 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

### விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான் பிரச்சாரம்

வேளாண் வளர்ச்சிக்கான விக்சித் கிரிஷி சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கம் 29.05.2025 முதல் 12.06.2025 வரை வெம்பாக்கம், அனக்காவூர், செய்யார், வந்தவாசி மற்றும் ஆரணி வட்டங்களில் 45 வருவாய் கிராமங்களில் நடத்தப்பட்டது. விவசாயிகளுக்கான கௌரவ நிதி திட்டம், பாசனதிட்டம், பிரதான் மந்திரி கிசான்மான் தன் யோஜனா, பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம், நமோ ட்ரோன் தீதி ராஷ்டரிய கிரிஷி விகாஸ் யோஜனா, பரம்பரகத் கிரிஷி விகாஸ் யோஜனா, மின்னனு வேளாண் சந்தை போன்ற மத்திய அரசின் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரச்சார இயக்கத்தின் மூலம் 20757 விவசாயிகள், மகளிர் மற்றும் இளைஞர்கள் பங்குபெற்றனர்.






# வேளாண் தொழில்நுட்பங்கள்

## நெற்பயிரில் பாசிகள் மூலம் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் மேலாண்மை

தமிழ்நாட்டில் 38.6 இலட்சம் எக்டேர் பரப்பளவில் நெற்பயிரனது முதன்மை மற்றும் முக்கிய உணவு பயிராக பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு பல்வேறு காரணங்களினால் விளைச்சல் இழப்பானது ஏற்பட்டாலும் சமீப காலமாக பாசிகள் மூலம் ஏற்படும் பாதிப்பு மிகப்பெரிய தலைவலியாக உருவெடுத்து வருகிறது. பாசிகள் என்பது பச்சையம் கொண்ட எளிமையான ஆரம்ப நிலைத் தற்சார்புடைய தாவரங்கள் ஆகும். இப்பாசிகள் நெல் வயலில் படர்ந்து வளர்வதால் நெற்பயிருக்குத் தேவையான காற்றோட்டம் தடைபட்டுப் பயிரின் வளர்ச்சி குன்றிக் காணப்படும். நாற்றாங்கால், நேரடி நெல் விதைப்பு மற்றும் நடவு வயல்களில், குறிப்பாக களர் மற்றும் உவர் நிலங்களில் அடியுரமாகப் பாஸ்பேட் உரங்களான டி.ஏ.பி. கலப்பு உரம் மற்றும் சூப்பர் பாஸ்பேட் அதிகம் பயன்படுத்தப்படுவதால் பாசிகள் பெருக்கமடைந்து அதன் மூலம் ஹைட்ரஜன் சல்பைடு வாயு வெளியேறுவதனால் நாற்றுகள் கருகும் நிலை ஏற்படுகிறது.

## மேலாண்மை முறைகள்

நெல் வயலில் பாசிகள் ஆரம்ப நிலையில் இருந்தால் கோனோவீடரை பயன்படுத்தி அவற்றை வயலில் அழுத்தி மண்ணோடு மூடிய பின்னர் மயில் துத்தம் (காப்பர் சல்பேட்) எக்டருக்கு 2.5 கிலோ் அல்லது அதிக அளவில் பாசிகள் இருந்தால் காப்பர் சல்பேட் எக்டருக்கு 5 கிலோ என்ற அளவில் இடுவதன் மூலம் பாதிப்புகளைக் குறைக்கலாம். மேலும், வயலில் நீரை வடிகட்டிய பிறகு 0.5 சதவிகிதம் மயில் துத்தக் கரைசலை (5 கிராம் என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும். பிறகு பாசிகள் தென்பட்டால் 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் மேலும் ஒருமுறை தெளித்து நெற்பயிரை பாசியின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கலாம். பொதுவாக பாசிகள் உவர் மண்ணில் தான் அதிகம் பெருகும். அவற்றைச் சரிசெய்யக் காப்பர் சல்பேட் இட வேண்டியது அவசியம்.

- உப்புத்தன்மை உள்ள ஆழ்துளை கிணறு நீர் மற்றும் கிணற்று நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.
- பாசிகள் உவர் நிலங்களில் அதிகமாக வளர்வதால், கோடை உழவோடு, நெல் நடவுக்கு முன்னர், எக்டருக்கு 250 கிலோ ஜிப்சம் இட்டுச் சேற்று உழவு செய்து மறுநாள் நீரை வடிகட்டலாம்.
- மண்ணில் கரிம தன்மையை அதிகரித்து காரத் தன்மையை சமநிலைப்படுத்த ஒரு ஏக்கருக்கு 5 - 7.5 டன் நன்கு மக்கிய இயற்கை எரு அல்லது பசுந்தாள் அல்லது பசுந்தழை உரம் இடலாம்.
- நுண்ணுயிர் உரங்கள் இடுதல் மற்றும் பயிர் சுழற்சி செய்வதன் மூலமும் நெல் நடவு வயல்களில் வளரும் பாசிகளினால் ஏற்படும் விளைச்சல் மற்றும் வருவாய் இழப்பைக் குறைக்கலாம்.
- ஒவ்வொரு ஐந்து அல்லது ஏழு நாட்களுக்கு ஒரு முறை திறன் மிகு நுண்ணுயிரி கரைசலை (EM) 2 லிட்டர் என்றளவில் 200 லிட்டர் தண்ணீரில் பாசனத்துடன் கலந்து கொடுக்கலாம்.
- ஒரு லிட்டர் துத்தநாகம் கரைக்கும் பாக்டீரியாவை 200 லிட்டர் நீருடன் கலந்து அளிக்கலாம்.
- மாலை வேளையில் மட்டும் 2 செ.மீ. அளவுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். அதிகம் தண்ணீர் பாச்சுவது உப்பு அளவு பெருக்கத்திற்கும், அதன் மூலம் பாசிகள் பல்கி பெருகுவதற்கும் வாய்ப்பாக அமையும்.
- நிலத்தின் ஈரம் குறையாமலும், நிலத்தைக் காய விடாமலும், தேவைக்கேற்பவும் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும்.


**சிறப்பு ஆசிரியர்**

திரு.ச.இரமேஷ், தலைவர், தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம்.

**ஆசிரியர்**

திரு.வே.சுரேஷ், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்

**ஆசிரியர் குழு**

திருமதி.த.மார்க்ரெட், தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்)
திரு.ப.நாராயணன், தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு)
மரு.கா.மாயகிருஷ்ணன், தொழில் நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்)
செல்வி.மா.ஐஸ்வர்யா, தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)
திரு.ர.விஜயகுமார், தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
திருமதி.ம.சாந்தி, பண்ணை மேலாளர்
திரு.ப.சௌத்திரி, திட்ட உதவியாளர் (ஆய்வகம்)

**நிர்வாகக் குழு**

திருமதி.ம.விஜி அலுவலக உதவியாளர்
திரு.ஓ.சேகர், திட்ட உதவியாளர் (கணிப்பொறி)
திரு.கா.வாசிமலை, சுருக்கெழுத்தாளர்




